சிவமயம்



சண்டிருப்பாய் சீரணியம்பதியில்
கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும்

# நாகபூஷணியம்மை

## தோத்திரப்பாமாலையும் திருவூஞ்சற்பதிகமும்.


ஆக்கியோன்:
அளவையூர்-சஞ்சீவி "அருட்கவி"
சீ. விநாசித்தம்பி அவர்கள்


ஸ்ரீ இலங்கை [illegible] அச்சகம், [illegible].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



சண்டிருப்பாய் சிரணியம்பதியில்

கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும்

# நாகபூஷணியம்மை

## தோத்திரப்பாமாலையும் திருவூஞ்சற்பதிகமும்.

ஆக்கியோன்:

அளவையூர்-சஞ்சீவி "அருட்கவி"

சீ. விநாசித்தம்பி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## முன்னுரை

சண்டிருப்பாய் சீரணி நாகேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபையினர், திருவிழா; உற்சவங்கள், ஆறுகால பூசைகள் முதலியவற்றை முறையாக நடத்திப் பரிபாலித்து வருகின்றார்கள் திருப்பணி வேலைகள்; ஸ்ரீ ஆலய திருப்பணிச் சபையினரால் தொடங்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதேவேளையில் அவர்களின் தொண்டுகளை ஊக்குவிக்கு முகமாக, அளவையூர் சஞ்சீவி-'அருட்கவி' சீ. விநாசித்தம்பி அவர்கள், சீரணி நாகபூஷணியம்மை தோத்திரப் பாமாலையும், திருஊஞ்சற்பதிகமும் ஆக்கி அளித்துள்ளார்கள்.

அடியார்கள் அம்பாளை வழிபட்டு உய்யும் வண்ணம் இப்பதிகத்தில் அம்பாளின் அருட்கருணையின் பொலிவை ஆக்கியோன் அவர்கள் தெளிவாகக் காட்டியுள்ளார்கள்.

இப்பதிகத்தை அச்சேற்றிவைக்கப் பொருளுதவி புரிந்த தொண்டரும் அம்பாளின் அருளைப் பெற்று உய்வாராக.

சண்டிவிப்பாய்
18-12-64

இங்ஙனம்
நா. கணபதிப்பிள்ளை
சைவப்புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# சண்டிருப்பாய் சீரணி நாகபூஷணியம்மை
# "தோத்திரப்பாமாலை"

## துதி

வாரணனைப் பெற்றவளே மன்னுபுகழ்ச் சண்டிருப்பாய்ச்
சீரணிவாழ் நாகராசேஸ்வரியே—ஆரணங்கள்
தந்தவளே நின்பாதம் தண்தமிழாற் பாடுதற்குச்
சுந்தரியே நீயே துணை.

## காப்பு

தேர்மேவு சண்டிருப்பாய்ச் சீரணியில் வந்தமர்ந்த
சீர்நாக பூஷணியின் சேவடியில்—பேர்மேவு
தோத்திரப்பாமாலை தொடுக்கக் கணபதியே
காத்தருள்வாய் நின்றென் கருத்து

## மாலை

பேராரும் பிரவணத்தின் பிழம்பே ஞானப்
பெருஞ்சுடரே அருந்தவத்தோர் பேணுந்தாயே
நீராரும் சடைமருவு நிமலன் பாகம்
நீங்காத அம்பிகையே நீணிலத்தில்
போராரும் கணபதியை, பொறிவேலேந்தும்
புத்திரனைப் பெற்றவளே பொன்னே செல்வச்
சீராடும் சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி 1

கல்விநலம் சுரந்தருளும் கனியே, பாகே
கற்றவர்கள் கருத்தினிக்கும் கரும்பே. பொங்கும்
பல்வளமும் பலஉலகும் படைத்துக் காக்கும்
பரஞ்சுடரே பரமனிடப் பாகினளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழும் நன்னெறிசேர் ஞானபப்பாலும்
நமக்களிக்கும் காரணியே நலமிக்கோங்கும்
செல்வமிகு சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி, போற்றி 2

ஓதரிய கலைஞானம் உதவும்தாயே
உள்நெகிழும் அன்பர் மனத்துதிக்கும் தாயே
நாதமொடு விந்தான நாகத்தாயே
நம்பனுடனாடுகின்ற நடனத்தாயே
போதமொடு வீடருளும் புனிதத்தாயே
புவனமீரேழினையும் பூத்ததாயே
சீதமலி சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாபூஷணியே போற்றி பேற்றி 3

ஒன்றுபல வடிவான உருவத்தாயே
ஓங்கார மந்திரமாய் ஒலிக்கும் தாயே
மன்றலுறு மலைமகளாய் வளர்ந்ததாயே
மணிவண்ணன் தங்கையென வாழ்ந்தாயே
அன்று மகிஷாசுரனை அழித்ததாயே
அருண்முலைப்பால் சம்பந்தர்க்களித்ததாயே
தென்றல் தவழ் சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி 4

ஐங்கரனுக் கருங்கனியை அருளும் தாயே
அறுமுகனைப் "பழனி" என அணைத்ததாயே
கங்கைவர லிங்கமதைக் காத்ததாயே
காலொன்றால் காலனையும் கடிந்ததாயே
பங்கிரண்டு படிநெல்லைப் பகிர்ந்ததாயே
பாம்பினங்கள் தாலாட்டும் பச்சைத்தாயே
செங்கழனிச் சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவான உருவான அழகுத்தாயே
அன்பர் மனக்கோயிலுள்ளே அமருந்தாயே
கருவாகி உயிராகிக் கலந்ததாயே
கண்ணாகி மணியாகிக் காணும்தாயே
மருவாகிச் சுவையாகி மலரும்தாயே
மண்எல்லாம் விண்ணெல்லாம் மருவும்தாயே
திருவாழும் சண்டிருப்பாய்ச் சிரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி 6

நாவன்மை மதிவன்மை நல்கும்தாயே
நம்பினவர் மனமிருந்து நடத்தும்தாயே
சீவன்தன் துயரமெல்லாம் தீர்க்கும்தாயே
சித்தியொடு முத்திதரும் செல்வத்தாயே
மாவின்கீழ்ப் பாலனொடு மகிழும்தாயே
மக்கண் மனை யுறவுநிதி வழங்கும்தாயே
தேவர்பணி சண்டிருப்பாய்ச் சிரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி 7

சிந்தனையில் தித்திக்கும் சிறந்ததேனே
தேவர்களும் மூவர்களும் தெரியாத்தேனே
பந்தனையாம் வேரறுக்கும் பசியதேனே
பவப்பிணியை மாற்றவல்ல பதுமத்தேனே
வந்தனை செய்வார்வலைக்கு வாய்க்கும்தேனே
மனத்தொருகால் நினைத்தவரை வளர்க்கும்தேனே
செந்தமிழ்வாழ் சண்டிருப்பாய்ச் சிரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி பேற்றி 8

கும்பிட்டுக் கேட்டதெல்லாம் கொடுக்கும் செல்வி
குமாரிஎன எங்குமுள குழந்தைச் செல்வி
செம்பட்டுத் துகில்வண்ணத் திலகச் செல்வி
திருக்கலசம் கரங்கொண்டு திகழும் செல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பற்குப் பங்கொத்த ஞானச் செல்வி
நமனூர் செல்லா தின்பம் நயக்கும் செல்வி
செம்பழனச் சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி 9

ஊனாகி உயிராகி ஒளிர்வாய் போற்றி
உலகனைத்தும் பரந்திருக்கும் உமையே போற்றி
வானாகிபூகமென மலிந்தாய் போற்றி
வஞ்சகர் நெஞ்சணுகாத மணியே போற்றி
மீனாட்சியாய் விளங்கும் விளக்கே போற்றி
மெய்த்தவத்தோர் அருந்துகின்ற விருந்தே போற்றி
தேனூறும் சண்டிலிப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி 10

### பயன்

### கட்டளைக் கலித்துறை

தாகம் தவிர்ந்திட நீர்தரும் வெம்பசிதான் தணிக்கும்
ஆகம் பொருந்திடு கல்வி சுகநிதி யானசிவ
போகம் தருமைந்தர் யோகந்தருமிந்த பூதலம்வாழ்
நாகம்பணி சீரணி மேவும் நாகம்மை நற்பதமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சீரணி நாகேஸ்வரி திருவூஞ்சல்

சீரோங்கும் மூலமெனும் தேவதேவா
சிவசத்தி தந்தவனே செல்வ மூர்த்தி
பாரோங்கு கலை சுரக்கும் பரமநாத
பத்தர்தமக் கருள் சுரக்கும் வேத கீதா
தேரோங்கு சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணிதன் னூஞ்சல்பாட
காரோங்கு கஜமுக ஐங்கரங்கள் கொண்ட
கணபதியே நின் பதங்கள் காப்பதாமே.

திருமருவு சைவநெறி சிறக்க வந்த
செல்வியே சிவன்பாகம் சேரும் தாயே
தருமநெறி யடியார்கள் தவத்திற் பேணும்
சங்கரியே அண்டமெலாம் தந்த தாயே
திருமுறையும் செந்தமிழும் சேர்ந்த பண்ணில்
திருத்தமுற ஆக்கிய பொன்னூஞ்சல் மேவி
திருமகள்வாழ் சீரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீரூஞ்சல் (1)

அருட்பொதிகை கைலைமலை தூண்களாக
ஆனந்த சோதிமலை விட்டமாக
விருப்புடைய நான்மறைகள் வடங்களாக
மேவுசிவ ஆகமங்கள் பீடமாக
அருப்பு மலர் மண்டலங்கள் ஆரமாக
அமைந்த பொன்னூஞ்சலிலே அமர்ந்திருக்கும்
திருப்பொலிவாய்ச் சீரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே யாடீரூஞ்சல் (2)

நாரதரும் தும்புருவும் நாதம் மீட்ட
நன்னூபதஞ் சலிபுலியும் தாளம் நீட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனும் சந்திரனும் தூபம் மூட்ட
தோகையர்க ளிருபுறமும் தீபம் காட்ட
வேரிமல ரயன் வேத விதி நடாத்த
வேணுகோபாலன் மணி மாலை சாத்த
சேருமெழிற் சீரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே யாடீருஞ்சல் (3)

அம்பலத்தில் அப்பனரு கமர்ந்திருக்க
ஆவினங்கள் மருவுநிழற் குடைபிடிக்க
செம்பதுமத் திருக்கரத்தால் சிவனர் பூசை
செய்தெம்மை யாண்டருளும் தேவியாயிக்
கும்பமுனி நந்திதவ முனிவர்வேண்ட
குரு ஞான அருளமுதம் கொடுத்தாயம்மா
செம்புனல்சேர் சீரணியூர் திகழும் தாயே.
செல்வ நாகேஸ்வரியே ஆடீருஞ்சல். (4)

புகழுடைய முடியாட சடைகளாட
பொற்றோடு மாலைகளும் பொருந்தியாட
முகமதிலி ரத்தினமூக் குத்தியாட
முண்டகப் பொற்பாத தண்டையாட
தகவுடைய சதுர்க்கரமும் தானுமாட
தாங்குமணித் தாமரையும் விடையுமாட
செகமேந்து தலையாதி சேடனுட
செல்வ நகேஸ்வரியே ஆடீருஞ்சல் (5)

ஓங்குபல அண்டங்கள் அதிர ஆட
ஓங்கார முகன் குமரன் அருகிலாட
பாங்கான மாயவனும் சங்குமாட
பண்ணவரும் இந்திரனும் பாவியாட
நீங்காத நஞ்சுண்ட நிமலனுட
செடியதிசை யதிபரொடு படைகளாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காயின் சிரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீருஞ்சல். (6)

வெம்பிணிகள் தீர்த்தடியார் விரும்பும் பேறு
வேண்டிய வாறுதவுமொரு விமலியாகி
சம்பந்தராதிபல ஞாவர்தம்மைத்
தந்தெம்மை வளர்ப்பவளே தழுவுதில்லை
அம்பலவ னுடலெல்லா மாகிநிற்பாய்
அற்புதமே அடியாருக் கமுதே தேனே
செம்பழனச் சிரணியூர் திகழுந்தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீருஞ்சல். (7)

தானமொடு தவநலங்கள் எங்கும் தங்க
தண்கனகம் குலிசம்மலர் கன்னல் கொண்டாய்
பானல்மா கதமேனிப் படிவத்தாளே
பஞ்ச கிருத்தியம் புரியும் பண்புகொண்டாய்
ஈனதிசை யணுகாமல் எம்மைக் காக்கும்
ஈஸ்வரியே உணவூட்டி இரட்சிப்பாளே
தேனளிவாள் சிரணியூர் திகழுந்தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீருஞ்சல். (8)

பூரணியே பார்வதியே புனித கஞ்சப்
பூமகளே சிற்பரையே பொன்னே வேத
காரணியே கற்பகமே கரும்பே ஆதிக்
கலையுருவே கனிரசமே கருணைசெய்யும்
நாரணியே நமசிவய நடனத்தாளே
நாகமணி நாயகியே நாதரூபி
சீரணியும் சிரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீருஞ்சல் (9)

ஓங்காரனைத் தந்தவளே ஆடீருஞ்சல்
அறுமுகனை அளித்தவளே ஆடீருஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனின் பங்கினளே ஆடீரூஞ்சல்
தவமிருந்த தயாபரியே ஆடீரூஞ்சல்
கங்கையிலே வந்தவளே ஆடீரூஞ்சல்
கண்ணனது சோதரியே ஆடீரூஞ்சல்
நங்கைவலை தீர்த்தவளே ஆடீரூஞ்சல்
நாகபூஷ்ணித்தாயே ஆடீரூஞ்சல் (10)

## வாழி

கனம்பூத்த கலையமுதம் தமிழும் வாழி
கதிர் நெல்லும் பசுவினமும் மழையும் வாழி
தனம்பூத்த செழுமை நலம் தழைத்து வாழி
தவம் பூத்த சைவமத தர்மம் வாழி
மனம் பூத்த அடியார்கள் மகிழ்ந்து வாழி
மண்ணுமறை ஆகம புராணம் வாழி
தினம் பூத்த கொன்றை முடிச்சிவனும் வாழி
சீரணி நாகேஸ்வரியும் வாழி வாழி.

முக்கிய குறிப்பு: மெய்யன்புடையீர், இந்நூல் விற்பனையால் வரும் பணம் ஷெ ஆலயத் திருப்பணிக்குரியதாகும் என்பதை அறியத்தருகிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org